### மக்கள் வரிப்பணத்தை இப்படி வீணடிக்கலாமா?

# முதல்வர் விஜய்யின் சிகை அலங்கார நிபுணருக்கு தனி விமானம்!

## சமூக வலைதளங்களில் வறுத்தெடுக்கும் நெட்டிசன்கள்!

சென்னை, ஜூன் 1-

பிரதமரை காண டெல்லிக்குச் சென்ற முதல்வர் விஜய் அவரது முடி அலங்கார நிபுணர் (விக் ஸ்பெஷலிஸ்ட்) ஜெகதீஷ் அவஸ்தி என்பரை தனி விமானத்தில் அழைத்து சென்றுள்ளது சமூகவலைதளத்தில் பேசும் பொருளாக மாறியுள்ளது. மேலும், மக்கள் வரிப்பணத்தை இப்படி வீணடிக்கலாமா என கேள்வி முன் வைக்கப்பட்டுள்ளது.

முதல்வராக யார் பொறுப்பேற்றாலும் அரசு மரபு படி குடியரசு தலைவர், துணை குடியரசு தலைவர், பிரதமர், நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ஆகியோரை சந்திப்பது என்பது மரபு அந்தவகையில் தமிழக முதல்வராக விஜய் கடந்த 10ம் தேதி பொறுப்பேற்ற பிறகு மே 27ம் தேதி இரண்டு நாள் பயணமாக டெல்லிக்கு மேலே குறிப்பிட்ட தலைவர்களை பார்க்க சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் சென்றிருந்தார்.

அவருடன் சேர்த்து மொத்தம் 9 பேர் இந்த விமானத்தில் பயணம் மேற்கொண்டதாக தகவல்கள் வெளியாகின. அதில் முதல்வர் விஜய்யின் முடி அலங்கார நிபுணர் (விக் ஸ்பெஷலிஸ்ட்) ஜெகதீஷ் அவஸ்தி என்பவர் பயணம் மேற்கொண்டுள்ளது தெரியவந்துள்ளது. மும்பையைச் சேர்ந்த இந்த ஜெகதீஷ் அவஸ்தி சிகை அலங்கார படிப்பை முடித்து பல சலூன்களில் பணிபுரிந்தார். பின்னர், முன்னணி ஹேர்ஸ்டைலிஸ்டுகளிடம் வேலை பார்த்தார்.

பாலிவுட்டில் துணை நடிகர் நடிகைகளுக்கு மேக் ஆப் ஆர்ட்டிஸ்டாக இருந்து முன்னணி திரை பிரபலங்களின் நட்பை விரிவுபடுத்திக் கொண்டு, அவர்கள் மூலம் விஜய்க்கு அறிமுகமாகி பின்னர் பிகில் படத்தில் அவருக்கு சிகை அலங்கார பணி செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. பிகில் திரைப் படத்தை தொடர்ந்து மாஸ்டர், பீஸ்ட், வாரிசு, லீயோ, திரைக்கு வெளிவராத ஜனநாயகன் வரை முதல்வர் விஜய் நடிகராக இருந்த போது அவருடன் பயணித்துள்ளார்.

சினிமாவை தாண்டி விஜய் அரசியல் கட்சி தொடங்கிய பின்னரும் அவரது ஸ்டைலிஸ்ட்டாக அவஸ்தி பணியாற்றி வந்த நிலையில் அவர் முதல்வராக வந்தது அந்த பணிகளையே தொடர்ந்து செய்து வந்துள்ளார். தனது பர்சனல் ஹெர் ஸ்டைலிஸ்டாக அவஸ்தியை நியமித்து கொண்ட முதல்வர் விஜய் தற்போது டெல்லிக்குச் சென்ற நிலையில் அவரையும் தனி விமானத்தில் அழைத்து சென்றது சமூக வலைதளத்தில் பேசும் பொருளாக மாறியுள்ளது.

முதல்வர் விஜய் டெல்லி சென்ற போது இலகு ரக சொகுசு தனி விமானத்தில் செல்ல வாடகையாக ரூ.7 லட்சம் வரை ஒரு மணி நேரத்திற்கு செலவானதாக கூறப்படுகிறது. இது தவிர அந்த விமானத்தை பார்க் செய்ய ஒரு மணி நேரத்திற்கு ரூ.2.5 லட்சம் வரை செலவு செய்யப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இந்த இரண்டு நாட்கள் பயணத்தில் ரூ.60 முதல் 70 லட்சம் வரை செலவினங்கள் ஆகி இருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ளன.

கடந்த காலங்களில் முதல்வர்கள் தனி விமானத்தில் அமைச்சர்கள், துறை சார்ந்த அதிகாரிகள் பயணம் மேற்கொண்ட நிலையில், முதல்வர் விஜய்யின் இந்த பயணத்தில் விக் ஸ்பெசலிஸ்ட், அவரது டிரைவராக இருந்த ராஜேந்திரன், பவுன்சர் என தனக்கு தெரிய தேவையான வட்டார நபர்களை அழைத்து சென்றுள்ளார். இவ்வாறு முதல்வரின் முதல் பயணமே சர்ச்சைக்குள்ளாகி இருப்பது மட்டுமின்றி, மக்களின் பணம் இப்படி தேவையில்லாமல் வீணடிக்கப்படுவதாக சமூகவலைதளத்தில் நெட்டிசன்கள் கேள்வி கணைகளை தொடுத்து வருகின்றனர்.

---

### அன்புச் சகோதரர் - நடிகர் அஜித்குமார் தாயார்

# திருமதி மோகினி மணி மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜூன் 1–**

**நடிகர் அஜித்குமார் அவர்களின் தாயார் திருமதி மோகினி மணி அவர்கள் மறைவுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

அன்புச் சகோதரர் அஜித்குமார் அவர்களின் தாயார் திருமதி மோகினி மணி அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

உயிர்கொடுத்து, தான் உயரங்கள் தொட்டதைப் பார்த்து மகிழ்ச்சி கொண்ட அன்னையினை இழந்து வாடும் அஜித்குமார் அவர்களைத் தேற்ற என்னிடம் வார்த்தைகள் இல்லை.

அன்னையுடனான அழகிய தருணங்களே இந்தத் துயரில் அவர் மீளத் துணை நிற்க விழைகிறேன். அஜித்குமார் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலும் ஆறுதலும்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாளை

# கோவை மாநகர் மாவட்டத்தில் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் அறிக்கை!



கோவை, ஜூன் 1-

கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பை அரை நூற்றாண்டு காலம் சிறப்புடன் நிறைவேற்றியவர். 5 முறை 19 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்புவகித்து நவீன தமிழகத்தை உருவாக்க அடித்தளம் அமைத்து வளர்த்தெடுத்த நவீன தமிழகத்தின் சிற்பி முன்னாள் முதலமைச்சர், தங்கச் சூரியன் உதிக்கும் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே, "என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே" எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே, பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பல லட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே, சட்டங்கள் பல இயற்றி, திட்டங்கள் பல தீட்டி தமிழ்நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே, இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் 103வது பிறந்த நாளை கோவை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட சிங்காநல்லூர், கோவை தெற்கு, கோவை வடக்கு சட்டமன்ற தொகுதிகளில் புத்தெழுச்சியுடன் கொண்டாடுங்கள்.

தமிழ் மொழியை, தமிழர்களை தன் உயிராய் நேசித்தவர், தமிழ் மண்ணில் சமூக நீதியை நிலைநாட்ட விடாப்பிடியாக போராடி வெற்றி கண்டவர், உயர் கல்வியை வளர்த்தெடுக்க அயராது உழைத்து முத்திரை பதித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். கலைஞரின் செயல்பாட்டு சிறப்பினை பின்பற்றி தமிழக மக்களுக்காக தொடர்ச்சியாக செயலாற்றி வரும் தி.மு.க தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளை ஏற்று கலைஞரின் பிறந்த நாளான 03.06.2026 புதன்கிழமை அன்று அனைத்து பகுதி, வட்டக் கழக அலுவலகங்களிலும், சார்பு அணிகளின் அலுவலகங்களிலும் கலைஞரின் திருவுருவச் சிலைக்கும், சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும்,

சிங்காநல்லூர், கோவை தெற்கு, கோவை வடக்கு ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள முதியோர் இல்லம், குழந்தைகள் காப்பகம், மாணவர் விடுதி, ஆதரவற்றோர் இல்லம் உள்ளிட்ட இடங்களில் உள்ளவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்து, நலத்திட்டங்களை வழங்கிட வேண்டுமாய் கழகத்தினரை கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாநகர் மாவட்டம் முழுவதும் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாநகர் மாவட்ட கழக நிர்வாகி கள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாநகராட்சி மேயர், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக முன்னணியினர் மற்றும் பொது மக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை

# புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாநில அமைப்பாளர் இரா. சிவா அறிக்கை!



புதுவை, ஜூன் 1

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்த நாள் மற்றும் "செம்மொழி நாள்" விழா 03.06.2026 அன்று புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது என மாநில அமைப்பாளர் இரா. சிவா தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

காலை 8.00 மணிக்கு - வில்லியனூர் அண்ணா சிலை அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவ படத்திற்கு அமைப்பாளர் இரா. சிவா மாலை அணிவித்து மரியாதை செய்தல்.


காலை 8.30 மணிக்கு - வீராம்பட்டினத்தில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு திமுக அமைப்பாளர் இரா. சிவா அவர்கள் மாலை அணிவித்தும், அவரது படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்த உள்ளார். தொடர்ந்து காலை உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை 9.00 மணிக்கு - தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏ.எப்.டி திடலில் ஒன்றிணைந்து இரு வண்ணக் கொடியேந்தி அங்கிருந்து ஊர்வலமாக சென்று அண்ணா சிலை அருகில் மாநில கழகம் சார்பில் அமைப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்ட உள்ளது.

ஆகையால் நமது மாநிலக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதிக்கழக நிர்வாகிகள், கிளைக்கழக நிர்வாகிகள், அணைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு :மாநிலக் கழக நிர்வாகிகள் குழு கூட்டத்தின் முடிவெடுத்ததின் படி புதுச்சேரியில் உள்ள 23 தொகுதிகளிலும் அந்தந்த தொகுதி கழகங்கள் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தி, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குமாரும், மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்த நாள் மற்றும் "செம்மொழி நாள்" விழாயொட்டி புதுச்சேரி மாநில கழகம் மற்றும் தொகுதிக் கழகம் சார்பில் இந்த மாதம் முழுவதும் மருத்துவ முகாம்கள், குருதிக்கொடை வழங்குதல், ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பொதுக்கூட்டம் நடத்தி கலைஞரின் சாதனைகளை விளக்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தருமபுரி மேற்கு மாவட்டம் பி.பள்ளிப்பட்டி அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் ஒன்றிய செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் வரும் ஜூன் 3 ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சி கிளைகள் தோறும்,வார்டுகளிலும் பொதுமக்கள்,பள்ளி மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.இதில் தாமோதரன்,வழக்கறிஞர் மா.சக்திவேல்,செல்வராஜ்,ஜாகிதாசெரீப், வே.செல்வன்,க.பன்னீர்செல்வம்,ஜடையன்,சானவாஷ்,தர்மசீலன்,மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

### பரந்தூர் விமான நிலையப் பணிகளை முடக்கிவிட்டு

# கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் சிப்காட் கொண்டு வருவது ஏற்கத்தக்கதல்ல!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூன் 1-

பரந்தூர் விமான நிலையத்திற்கான பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நன்மை பயப்பதல்ல! பெரும் விரிவான வளர்ச்சியைத் தரவல்ல விமான நிலையப் பணியை நிறுத்தி விட்டு கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் சிப்காட் கொண்டு வருவது ஏற்கத்தக்கதல்ல. பரந்தூர் விமான நிலையப் பணிகள் முடக்கப்படக் கூடாது. பழைய அதிமுக ஆட்சியாளர்களின் செயல்பாடுகளால் முன்பு ஏற்பட்ட நட்டம், புதிய ஆட்சியாளர்களாலும் தொடரப் படக் கூடாது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

சென்னை விமான நிலையத்தின் விரிவாக்கப் பணிகளுள் முக்கியமான பரந்தூர் விமான நிலையப் பணிகள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் வருகின்றன. பரந்தூர் பகுதியில் விமான நிலையத்தின் புதிய டெர்மினலை அமைக்க, கடந்த தி.மு.க. ஆட்சியில் 5600 ஏக்கர் பரப்பளவில் விரிவான திட்டம் தீட்டப்பட்டு, அதற்கான நிலங்கள் கையகப்படுத்தும் பணியும், அதையொட்டி அடிப்படைப் பணிகளும் தொடங்கப்பட்டு நடந்து வந்தன.

**தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நன்மை பயப்பதல்ல!**

பரந்தூர் விமான நிலையத் திட்டத்திற்கு எதிராக ஏகனாபுரம் உள்ளிட்ட 13 கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜோசப் விஜய் பரந்தூருக்குச் சென்று விவசாயிகளுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தார். நீர் நிலைகளில் விமான நிலையம் கட்டக்கூடாது என்று விவசாயிகளும், இயற்கை ஆர்வலர்களும் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில், தற்போது விமான நிலையத்திற்கான பணிகள் நிறுத்தப்பட்டுள்ள தாக தகவல் வெளியாகியுள்ளது. இது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நன்மை பயப்பதல்ல.

உலகின் பெரும் நாடுகளில் விமான நிலைய விரிவாக்கங்கள், புதிய கட்டுமானங்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. விமானப் போக்குவரத்தின் வேகம் பெருகியபடி இருக்கும் சூழலில், அதற்கு ஈடு கொடுக்க, வளர்ந்த நாடுகள் மேலும் மேலும் போட்டி போடுகின்றன.

**சென்னை மட்டும் பின் தங்கி இருக்கலாகுமா?**

இந்தியாவின் முதன்மையான டில்லி இந்திரா காந்தி பன்னாட்டு விமான நிலையம் 77.8 மில்லியன் பயணிகளைக் கையாளுகிறது. மும்பை சத்ரபதி சிவாஜி மகாராஜ் பன்னாட்டு விமான நிலையம் 54.8 மில்லியன் பயணிகளையும், பெங்களூரு கெம்பேகவுடா பன்னாட்டு விமான நிலையம் 40 மில்லியன் பயணிகளையும், அய்தராபாத் ராஜீவ் காந்தி பன்னாட்டு விமான நிலையம் 29 மில்லியன் பயணிகளையும் கையாளுகின்றன, ஆனால், சென்னை பன்னாட்டு விமான நிலையம் 22 மில்லியன் பயணிகளை மட்டும் தான் கையாளுகிறது.

இந்தியாவின் நான்கு பெருநகரங்களில் நாம் தான் கடைசி! கொல்கத்தாவும் இதே 22 மில்லியன் பயணிகளைத் தான் கையாளுகிறது. ஆனால் கொல்கத்தாவின் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பன்னாட்டு விமான நிலையத்தில் 45 லட்சம் பேருக்கானதாகத் தரம் உயர்த்தப்படும் வேலை நடக்கிறது. இந் நிலையில் சென்னை மட்டும் பின் தங்கி இருக்கலாகுமா?

**முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தை கைவிடுதல் கூடாது!**

விமான நிலையங்களின் உருவாக்கம், விரிவாக்கம் என்பவை வெறும் பயணிகள் தொடர்புடையது மட்டுமல்ல; பொருளாதாரப் பெருக்கத்தின் வாய்ப்பு. புதிய கட்டமைப்புப் பெருக்கத்திற்குத் தூண்டுகோல். பல பெரும் நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கான அடிப்படை ஈர்ப்பு. அதன்மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்பு பெருகும். உப தொழில் வாய்ப்புகள் அதிகமாகும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தை முழுமையான புரிதலின்றி கைவிடுதல் கூடாது.

கையகப்படுத்தப்பட்ட 1700 ஏக்கர் நிலங்களையும் மீண்டும் அந்த விவசாயிகளுக்கே திருப்பித் தர இயலாது. அதற்கு வழங்கப்பட்ட ஈடுத் தொகையை அவர்களிடமிருந்து திரும்பப் பெறுதல் சாத்தியமில்லை. அந்த நிலத்தில் சிப்காட் வரலாம் என்று பேசப்படுகிறது. சிப்காட் கொண்டு வருதல் தவறில்லை.

ஆனால், அதைவிட பெரும் விரிவான வளர்ச்சியைத் தரவல்ல விமான நிலையப் பணியை நிறுத்தி விட்டு சிப்காட் கொண்டு வருவது வரவேற்கத்தக்கதல்ல!

பொருளாதார வளர்ச்சிக்கான சில முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் போது நிலங்களைக் கையகப்படுத்தாமல் அரசால் எந்த வளர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வர முடியும்? அதைப் புரிந்துதானே அரசியலமைப்புச் சட்டத்தில் அதற்கான பிரிவில் அரசுக்கு உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

ஆட்சி யார் கையில் இருந்தாலும், அரசாங்கம் என்பது தொடர்ந்து இயங்கி வருவது. பல திட்டங்களை முடக்கியதால், நட்டம் முந்தைய ஆட்சிக்கு அல்ல;

**தமிழ்நாட்டுக்குத் தான்!**

முந்தைய அரசு கொண்டுவந்து செயல்படுத்தத் தொடங்கிய திட்டத்தை இப்படி நிறுத்துவது அறிவுடைமையாகாது.

கடந்த 2006-2011 ஆட்சிக் காலத்திலும், அதற்கு முன்பும் தி.மு.க. ஆட்சி கொண்டு வந்த பல திட்டங்கள் அடுத்த ஆட்சியாளர்களால் பாதியில் நிறுத்தப்பட்டன.

பின்னர் கடும் சட்டப் போராட்டங்களுக்குப் பின், மெட்ரோ, மதுரவாயல் துறைமுகம் பறக்கும் சாலை உள்ளிட்ட சில திட்டங்கள் மீட்கப்பட்டன.

பல திட்டங்களை முடக்கியதால், நட்டம் முந்தைய ஆட்சிக்கு அல்ல; தமிழ்நாட்டுக்குத் தான். பல ஆண்டுகள் வளர்ச்சிகள் தேங்கிப் போயின. அப்படி, பரந்தூர் விமான நிலையமும் அமைந்துவிடக் கூடாது. பழைய அதிமுக ஆட்சியாளர்களின் செயல்பாடுகளால் முன்பு ஏற்பட்ட நட்டம், புதிய ஆட்சியாளர்களாலும் தொடரப்படக் கூடாது. வளர்ச்சியுற்ற தமிழ் நாட்டை வாக்கு வங்கிக் கண்ணோட்டம் அழித்துவிடக் கூடாது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மு. சண்முகம்
## ஜூன் 1 (1987)



தந்தை பெரியாரின் நம்பிக்கைக்குரிய தொண்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, பேரறிஞர் அண்ணாவின் கவனத்தைக் கவர்ந்து அவரது இதயத்திலும் தனக்கென ஒரு இடத்தை பிடித்துக் கொண்டவர்.

கழகம் துவங்கிய காலத்திலிருந்து தலைமைக் கழகத்தில் பொறுப்பாளராக பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

'நம்நாடு' திங்கள் இதழாக வெளிவந்தபோதும்,'கழகக் குரல்" வார இதழிலும், 'தோழன்' என்ற புனைப்பெயரில் இவர் எழுதிய கட்டுரைகள் ஏராளம்.

1976ல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, மிசா காலத்தில் சோதனை ஏற்பட்டபோது தான் 'தோழன்' என்ற பெயர் அவருக்கு எவ்வளவு பொருத்தம் என்பது புரிந்தது என தலைவர் கலைஞர் கூறியுள்ளார். மேலும், தனது இரங்கல் உரையில் "கழகத்தின் வரலாற்றுக் குறிப்புப் புத்தகம் எழுதப்படாத புத்தகம் சண்முகம்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**